மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அதன்மேல் விவாதம் ஒன்றும் வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி அளித்தபிறகு அதற்குமேல் அதில் என்ன விவாதம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வேறு பொருள் குறித்து பேசுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படும் திட்டங்களை அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வையுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். நீங்கள் திட்டங்களை நிறைவேற்றினீர்களா அல்லது நிறைவேற்றவில்லையா என்ற பிரச்சினைக்குள் நான் போகவில்லை. அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வையுங்கள் என்ற கோரிக்கையைத்தான் நான் அவைமுன் எடுத்து வைத்திருக்கிறேன்.*

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது முதல் இருபத்தி நான்காவது வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*